JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 7.] ஜுலை மீ 1888. [புஸ்த. XIX.

CONTENTS.

Which is of the greatest Benefit to his Country—The Warrior, the Statesman, or the Poet?:—A discussion among three Princesses.............. 145
The Emperor of Germany and the Shepherd Boy........... 157
The Merchant and his Dog..... 160
The Ancient Kings of India and their idea of Justice (*Continued*)..................... 162
Acknowledgment of Error the mark of a noble Mind......... 166
News.................................. 168

அட்டவணை.

சுத்தவீரன், அமைச்சன், கவிவாணன் ஆகிய இம்மூவரில் தன் நாட்டுக்குப் பெரும் பிரயோசனத்தை விளைப்பவன் எவன்?:—மூன்று இராஜ புத்திரிகளுக்குள் நடந்த தர்க்கம்......................... 145
ஜெர்மனிதேசத்துச் சக்கிரவர்த்தியும் ஆடுமேய்க்கும் சிறுவனும்... 157
வர்த்தகனும் அவன் நாயும்......... 160
இந்துதேசத்துப் பூர்வீக அரசர்களும் அவர்களுடைய நீதியும் (தொடர்ச்சி)......................... 162
குற்றத்தை ஒப்புக்கொள்வது பெருந்தன்மைக் கடையாளம். 166
சமாச்சாரம்.............................. 168

MADRAS.
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

ஜநவிநோதினி.

இல. 7.] ஜூலை மீ 1888. [புஸ்த. XIX.

சுத்தவீரன், அமைச்சன், கவிவாணன் ஆகிய இம்மூவரில் தன் நாட்டுக்குப் பெரும் பிரயோசனத்தை விளைப்பவன் எவன்?

பத்மாபுரி என்னும் பட்டணத்தில் அரசுபுரிந்துவந்த ஜயதுங்கன் என்னும் வேந்தனுக்கு மங்கையர்க்கரசி என்னும் இல்லறத்துணைவி இருந்தனள். அவ்விருவர் தவப்பேறாக மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி என்னும் பெயருடைய மூன்று பெண்கள் பிறந்து நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து சகல கலைகளிலும் கல்வி பயின்று நுட்பபுத்தி அமையப் பெற்றிருந்தார்கள். ஓர் நாள் மங்கையர்க்கரசியாகிய தாயும் மூன்று வனிதாரத்தினங்களாகிய புத்திரிகளும் அனேக தாதியர்-சேடியர் முதலியோர் தம்மைப் புடைசூழ்ந்து உபசாரம் செய்துவர அவ்வூருக்கு அருகேயிருந்த ஓர்உத்தியானவனத்திற் சென்று உல்லாசமாய்க் காலங் கழித்துக்கொண்டிருக்கையில், இராஜ சமஸ்தானத்தில் மஹாபிரசித்தியடைந்த படைவீரர்களைப்பற்றியும் அமைச்சர்களைப்பற்றியும் கவிவாணர்களைப்பற்றியும் சம்பாஷிக்கலானார்கள். தம்முடைய அரசாட்சிக்கு உட்பட்ட நாட்டுக்குப் பெரும் பிரயோசனத்தை விளைப்பவர் ஆண்மையிற் சிறந்த போர் வீரரா? அல்லது மதியூகிகளாகிய மந்திரிகளா ? அல்லது கேட்போர் உள்ளங்கரையும்படி பாக்களைச் செய்யவல்ல கவிவாணர்களா? என்று அப்பெண்கள் கூட்டத்திற்குச் சபாநாயகியாயிருந்த மங்கையர்க்கரசி தன் புதல்விகள் மூவரையும் நோக்கி வினவினாள். அதைக்கேட்ட மீனாட்சி என்னும் மூத்தபெண்-மேற்சொல்லப்பட்ட மூவகையாருள்ளும் சுத்த வீரர்களே நாட்டுக்குப் பெரும்பிரயோசனத்தை அளித்து வருகின்றனர் என்றும், காமாட்சி என்னும் இரண்டாவது பெண்-மந்திரிகளே தேச

த்துக்குப் பெரும்பயனைக் கொடுத்துவருகின்றனரென்றும், விசாலாட்சி என்னும் மூன்றாவது பெண்-கவிவாணர்களே நாட்டுக்குப் பெரும் பயனை நல்கி வருகின்றார்களென்றும் விடைபகர, மங்கையர்க்கரசி தன் அருமைப்புதல்விகள் தம்முள் மாறுபட்டு வெவ்வேறு அபிப்பிராயங் கொண்டதற்காக வியந்து, என் கண்மணிகளே ! என் செல்வப்புதல்விகளே ! நீங்கள் கொண்ட அபிப்பிராயத்துக்கு முறையே தகுந்த காரணங்கள் கூறுவீர்களாக என்றனள்.

மீனாட்சிசெய்த உபந்நியாசம்.

என்னை ஈன்றெடுத்த அன்னையே! என் அருமைச்சகோதரிகளே ! மித்திரிகளே ! சாஸ்திரங்களில் மிகவும் தேர்ச்சியுள்ளவர்களே விவகரிக்கத்தக்க இந்த அருமையான விஷயத்தைக்குறித்து நான் பேசத்தொடங்குவது - "குன்றினிற்பிரசந்தன்னை யறிவிலாப்பங்கனேறியருந்தவேனென்பதொக்கும்." — மலையிலுள்ளதேனை அறிவில்லாத முடவன் ஏறிப்புசிப்பேனென்பதை நிகர்க்கும். இந்தக் கேள்வி ஒருவனுடைய தேகத்தில் சிரம்-இருதயம்-கரம் என்னும் மூன்று அவயவங்களில் எது மிகச்சிறந்தது? என்னும் வினாவையொக்கும். தேகம் ஆரோக்கியஸ்திதியிலிருப்பதற்கு இம்மூன்று அவயவங்களும் முக்கியமானவை. பகைவர்கள் வாராவண்ணம் தேசத்தைக் காப்பதற்கான சௌரியம்-பராக்கிரமம் இவற்றைப் பெற்றிருக்கும் சுத்தவீரனே ஒருதேசம் என்னும் சரீரத்துக்குக் கரமாவான். இன்னின்ன காலத்தில் இன்னின்னவற்றைச்செய்வது யுக்தமென்று எதிர்கால உணர்ச்சியுடன் கூறுவதற்குவேண்டிய நுட்ப புத்தியாகிய அறிவைப் பெற்றிருக்கும் மந்திரியே அந்த தேசம் என்னும் சரீரத்துக்குச் சிரமாவான். தேசத்திலுள்ள எவ்வகைப்பட்ட குடிஜனங்களும் அழுக்காறு-அவா-வெகுளி முதலிய தீக்குணங்களை விடுத்துத் தெய்வபக்திபெற்றுச் சுசிலர்களாகிப் பிறவியை ஒழித்துப் பரலோக இன்பத்தை அடைவதற்குவேண்டிய சுகுணங்களை ஊட்டவல்லவனாகிய கவிவாணனே யாதொரு தேசமென்னும் சரீரத்துக்கு இருதயமாவான். ஆகவே இம்மூவரில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷயத்துக்கு இன்றியமையாதவனென்பது யாவருக்கும் உடன்பாடானவிஷயம். ஆயினும் இம்மூவருள் நாட்டுக்குப் பெரும்பயனைத்தரத்தக்கவன் இன்னானென்பதை நியாயவாயிலாகக் காட்டவேண்டியிருக்கிறபடியால், சுத்தவீரனே ஏனைய இருவரினும் பெரும்பயனை விளைக்கத்தக்கவனென்னும் என் கொள்கை. யிதனை நாட்டுவதற்குச்

சமாதானங்கூறுகிறேன். மதியூகியாகிய மந்திரியும் பாவலனாகியகவிவா
ணனும்இருந்த இடத்திலிருந்தே இப்படி அப்படி என்று வாயினாலே அ
ளக்கலாம். பகைவர் எதிர்த்து வந்தகாலத்து அமர்க்களத்தில் நின்று
சௌரியத்துடனும் வீராவேசத்துடனும் புறங்காட்டாது போர்புரிந்து
தன் நாட்டிலுள்ள குடிகளுக்கு ஹானிநேரிடாவண்ணம் அவர்களை இர
ட்சித்துத் தன் அரசன் விஷயமாய்ச் செஞ்சோற்றுக் கடனைச்செலுத்
தும் சுத்தவீரனே ஏனைய இருவரினும் சிறந்தவன். அவன் அமர்க்கள
த்திலிருந்து பகைவரைச்சேதியாவிட்டால் செங்கோலெங்கே? மந்திரி
எங்கே? கவிவாணனெங்கே? இவ்வுத்தியானவனமெங்கே? நாம் இவ்
வளவு மனோகரமாய்க்கூடிச் சம்பாஷிப்பதெங்கே? குடிஜனங்களுக்கு
நிம்மதையான சுகவாழ்க்கை எங்கே? வர்த்தகமெங்கே? யாவும் கு
றையிற்பட்ட பஞ்சுபோல் அலையவேண்டியதல்லவா? உலகத்தில் சம்
பத்தான நிலையிலிருந்த பற்பலதேசங்களின் ஸ்திதியைச் சற்றுயோசி
த்துப்பார்ப்போம். எந்தத்தேசத்தில் இராணுவபலம் அதிகமாயிருந்த
தோ அதுவே ஏனைய எல்லாத்தேசங்களையும் தன்னடிப் படுத்தித் த
னியரசு புரிந்து வந்ததென்று சரித்திரங்கள் சாட்சிகூறுகின்றன. உ
ரோம்-ஸ்பார்டா-இங்கிலாந்து முதலிய தேசங்களின் பெருமைக்கெல்
லாம் புஜபல பராக்கிரமம் பெற்றுத் தேசாபிமானம் பூரணமாய் நிறை
ந்த இராணுவ வீரர்களே காரணமாயிருந்தனர். கிரீஸ் தேசத்தின் பூர்
வீக சரித்திரமும் இந்தவிஷயத்தை உண்மையென்று பறையறையும்.
கல்வி-நாகரீகம்-தெய்வபக்தி முதலியயாவும் வேற்றரசர் படையெடுத்
துவருங்காலத்துக் குடிகளிடத்தில் எங்ஙனம் சிறந்தோங்கும்? போர்
நேரிடாதபடி தடுப்பவனும் போர் நேரிட்டவிடத்துப் பகைவரைச்சே
தித்துத் தன்நாட்டுக்குடிகளைக் காப்பவனும் ஆண்மையிற் சிறந்த சுத்த
வீரனேயாவன். அவனுடையசெய்கையைத்தான் பரமபுருஷார்த்தமெ
ன்று சொல்லவேண்டும். ஹைதர்-டிப்பூ சுல்தான் முதலியவர்களுடைய
பெயரை இப்போது கேட்டாலும் கர்ப்பம் கலங்குகிறதல்லவா? இவர்
களும் இவர்கள் சைனியங்களும் நாற்புறமும் குடிகளை இம்சித்து, அவ
ர்களுடைய பொருள்களையெல்லாம் கொள்ளைகொண்டு, மனைவிகளின்
கற்பைக்குலைத்து, மக்களையலைத்து, யாவர்வயிற்றிலும் தீமூட்டிவந்த
காலத்து, மந்திராலோசனை சொல்லத்தக்க அமைச்சர்களும் நவரசத்து
டன் பாக்கள் பாடவல்ல கவிவாணர்களும் போக்கற்றுத் தஞ்சம் அளி
ப்பாரின்றித் தெய்வமே! தெய்வமே! என்றலறிக் கூக்குரலிட்டுப் பில
ங்களிலும் வனாந்தரங்களிலும் போயன்றோ ஒளித்திருப்பார்கள்? இவ்

விந்தியதேசத்துச் சோமநாதபுரம் முதலிய தேவாலயங்களெல்லாம் பட்டபாடு தெரியாதோ? இத்தியாதி மனக்கலக்கங்களையெல்லாம் நீக்கித் தேசத்துக்கு நன்மையைத் தரத்தக்க சுத்த வீரர்களென்னும் சூரியர்களிராமையினாலன்றோ கொடுங்கோன்மை என்னும் இருள் நம்தேசத்தை மூடிவெற்றிகொண்டிருந்தது? ஆகையால் ஏனைய இருவரினும் ஆண்மையிற் சிறந்த சுத்தவீரனே யாதொரு தேசத்துக்குப்பெருத்தநன்மையைச் செய்யத்தக்கவன்.

காமாட்சிசெய்த உபந்நியாசம்.

பரிவிற்சிறந்த தாயே! பெறுதற்கரியசோதரிகளே! தோழிகளே! நெடுங்கால அனுபவமும் ஆழ்ந்த கல்வித்தேர்ச்சியும் அத்தியாவசியமாய் வேண்டியிருக்கிற இந்த அருமையான விஷயத்தைப்பற்றி யான் புகலத்தொடங்குவது- "பாற்கடலைச்சிற்றெறும்புபருககினைப்பதுபோலும்."— பாற்கடலைச் சிறு எறும்பு குடிக்க நினைப்பதை ஒக்கும். யாதொரு தேசமென்னும் சரீரத்திற்குச் சுத்தவீரன் கை என்றும் மந்திரி சிரமென்றும் கவிவாணன் இருதயமென்றும் என் மூத்த சகோதரி எடுத்துக் கூறிய உபமானமே உபமானம்! பலத்தைக்கொண்டு பகைவரை வெல்லுவது முதலிய காரியங்களைச் செய்வதனால் சுத்தவீரனைக் கரத்துக்கும், புத்தி கூர்மையினால் ஆலோசனை சொல்லுவதிற் சிறந்தவனானபடியாலும், அதற்கு அத்தியாவசியமாக வேண்டிய விவேகத்தின் ஸ்தானம் சென்னியானபடியாலும் மந்திரியைச் சிரத்துக்கும், தெய்வபக்தி முதலியவற்றைப் பிரஜைகளுக்கு உண்டாக்குவதனால் கவிவாணனை இருதயத்துக்கும் மீனாட்சி உவமித்தனள். அவ்வுபமானம் சால அழகுடைத்து. யாதொரு காரியத்தின் யுக்தாயுக்தத்தைப்பற்றியாவது அதைச்செய்யும் விதத்தைப் பற்றியாவது விவேகம் நிச்சயித்துக் கூறிய பிறகல்லவா கை செய்ய ஆரம்பிக்கவேண்டியது? புத்தியை ஆதாரமாகக் கொள்ளாவிடத்து அசேதனப் பொருளாகிய கரம் பயனில்லையே? சரீரத்தின் விஷயத்தில் எப்படியோ அதுபோலவே யாதொரு தேசத்தின் விஷயத்திலும் மந்திரி பகைவரை வெல்லும் இடம்-காலம்-கருவி-வகை முதலியவற்றை விவேகத்தினாலறிந்து கூறினாலன்றி, எவ்வளவு ஆண்மையிற் சிறந்தவனா யிருக்கினும் சுத்தவீரனுடைய செய்கை ஒன்றுக்கும் பயன்படாது.

"தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்லதமைச்சு."

யாதொரு காரியத்தைச் செய்யும் விதங்கள் பலவாகத்தோன்றின விடத்து அவற்றுள் அதி யுக்தமானதை ஆராய்ந்தறிவதிலும், அப்படிப் பட்டதைச் செய்கையில் அது பயன்படும் விதத்தை நாடிச்செய்வதிலும், சிலரைப் பிரித்தல்-பொருத்தல் ஆகிய இச்செயல்களிலே துணிவு பிறக்கும்படி வற்புறுத்திக் கூறுவதிலும் வல்லவனே அமைச்சன் என்று நாயனார் கூறியுள்ளார். ஆகவே இவ்வளவு காரியங்களையெல்லாம் விவேகத்தினலறிந்து யாதொன்றைச்செய்யஅமைச்சன் உத்தாவுகொடுத்தாலல்லவா அதைச் செய்கையில் சுத்தவீரனது ஆண்மை பயன்படும்? தேகத்தினல்மாத்திரம் வருந்தி யுழலுவது எவ்வளவு வியக்கத்தக்கதாயிருக்கினும் உலகத்தில் அதற்குச் சிறப்பில்லை. விவேகத்தைக் கொண்டு உழைத்தல் எவ்வளவு சிறிதாயினும் அதற்கே பெருமையதிகம். நியாயாதிபதி-சேவகன் ஆகிய இருவரில் யாருக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது? யாரை உலகத்தார் அதிகமாய் மதிக்கிறார்கள்? வெய்யிலிலும் மழையிலும் வருந்தி ஒடித்திரியும் சேவகனுடைய சரீரப் பிரயாசைக்கெல்லாம் சம்பளம் பத்து ரூபாய்தான். சுகமாய் இருந்தஇடத்திலிருப்பவனைப்போற் காணும் நியாயாதிபதிக்குச் சம்பளம் ஆயிரம் ரூபாய் கணக்காக இருக்கிறது. அதுபோலவே தேகபலத்தைக்கொண்டு போர்புரியும் சுத்தவீரர்களைக்காட்டினும் அவர்கள் யாவரையும் பிரேரேபிக்க இருந்தஇடத்திலிருந்து விவேகத்தினலுழன்று யுக்தாயுக்தங்களைச் சொல்லவல்ல அமைச்சனே சிறந்தவன் ஆகின்றான். சுத்தவீரர்கள் பாவைகளுக்குச் சமானம். அமைச்சனே அவற்றை ஆட்டுவிக்கும் சூத்திரதாரியைப்போன்றவன். காசானுதி அவயவங்களுடன் அதி அற்புதமாய் இயங்கும் பாவைக்குவரும் பெருமையெல்லாம் சூத்திரதாரியைத்தான் சேரும். எனெனில்

> "நன்னரிற்பூட்டிய சூத்திரப்பாவை நன்னூர்தப்பினற்
> றன்னூலுமாடிச் சலித்திடுமோ?"

அன்றியும் சுத்தவீரனுடைய செய்கையெல்லாம் பெரும்பாலும் சுயப்பிரயோசனத்தை நாடியதாகவே இருக்கின்றது. போர்க்களத்தில் தன் இன்னுயிரைக் காப்பதற்காகவாவது, உலகத்தில் புகழை நாட்டுவதற்காகவாவது ஒருவேளை இறந்தால் வீரசொர்க்கத்தை யடைவதற்காகவாவது சுத்தவீரன் தன் ஆண்மையைக் காட்டுகின்றானேயன்றித் தன் நாட்டாருடைய அசேஷ க்ஷேமத்தை அவன் அமர்க்களத்தில் கருதுகிறதாகத்தோன்றவில்லை. அல்லாமலும் அமர்க்களத்தில் சதா உதிர

வெள்ளத்திலே நீந்துவது ஒன்றையே தனக்குப் பெரும்பொருளென மதிப்பவனாகிய சத்தவீரனிடத்து இரக்கம்-பச்சாத்தாபம்-அன்பு-தெய்வபக்தி முதலிய சற்குணங்கள் எங்ஙனம் அமையும்? அமைச்சனோ மேற்கண்ட சகல சற்குணங்களையும் பொருந்தினவனாயும், "அனைவோர்க்குந்தெய்வமிலுமுகப்பைம்பூணிறை." என்றபடி குடிகளுக்குத் தெய்வமாயுள்ள அரசனுக்குக் கண்ணுங் கவசமுமாயும் இருக்கின்றான். கவிவாணன் தரித்திரதிசையடைந்து பிறரிடத்து யாசிப்பதையே தனக்கு விரதமாகப் பூண்டவனானபடியால் யாதொரு தேசத்துக்கு அவனால் ஒரு சிறிதும் நன்மையுண்டாகமாட்டாதென்பதே என் கொள்கை. மேற்போந்த நியாயங்களினால் சத்தவீரன் - மந்திரி - கவிவாணன் ஆகிய மூவரில் மந்திரியே ஒரு தேசத்துக்குப் பெரும்பயனைத் தாத்தக்கவனென்பது என் துணிபு.

விசாலாட்சிசெய்த உபந்நியாசம்.

ஐயிருதிங்கள் அனியுதரத்திற் சுமந்து என்னை யீன்றெடுத்த மாதாவே! அருமைச் சகோதரிகளே! சேடிகளே! இப்போது விவகரிக்கப்பட்ட விஷயத்தைக்குறித்து என்னிரண்டு சோதரிகளும் கடல் மடைதிறந்தாற்போல் உபந்நியாசம் செய்தனர். என்னுடைய உபந்நியாசம் சொன்னயம் பொருணயம் முதலியவற்றில் மிகவுங் குறைந்ததாயினும்,

> "கோவுடனேகூடிவருங் குருட்டாவு மூர்புகுதும்
> பூவுடனேகூடியநார்புனிதர் முடிக்கணியாமல்."

பசுக்கூட்டங்களுடன் செல்லும் ஓர் குருட்டுப்பசுவும் அவற்றின் பின் செல்லுங் காரணத்தினால் க்ஷேமமாய் ஊர்போய்ச் சேர்வதுபோதும், பூவுடன்சேர்ந்த காரணத்தினால் நாரும் நின்மலனாகிய தேவதேவனது திருமுடியில் ஏறுவதுபோலும், அறிவிற்சிறந்த இரு சோதரிகளும் செய்த உபந்நியாசத்துடன் கடைப்பட்ட என்னதும் உங்கள் செவிக்கு ஏறுமென்று துணிந்து கூறுகின்றேன்.

என் மூத்த சகோதரியாகிய மீனாட்சிகூறிய நியாயங்களை எதிர்மறுத்துக் கூறுவதன் முன்னர், காமாட்சி கடைசியாக எடுத்துரைத்த ஓர் விஷயம் என்செவிக்கு நாராசம் போன்றிருக்கிறபடியால் முன்னர் அதற்குச் சமாதானங்கூறிப் பின்னர் என்கொள்கையை நாட்டமுயலுவேன். கவிவாணர்கள் சதா வறியவர்களாயிருந்து பிறரையாசிப்பதையே தம்பொருளென மதிக்கின்றார்கள் என்று காமாட்சிகூறியது ஒருவிதத்

தில் ஒப்புக்கொள்ளத் தக்கதுதான். ஒரு அரசனிடத்தில் தன் கல்வித் திறத்தைக்காட்டிப் பரிசுபெறலாமென்று கருதிச்சென்ற ஓர் கவிவாணனது வறுமையின் கொடுமையைப்பார்த்து அவ்வரசன் அதிக இறுமாப்புடன் தன் சமுகத்திலிருந்த மந்திரிகளைநோக்கி, பல நூல்களையும் கற்றுணர்ந்தும் வித்துவான்கள் தம் பெருமையழிந்து வறுமைத்துன்ப முறுவதற்குக் காரணமென்னை? என்று கேட்க அம்மந்திரிகள் விடைகூறாது விழித்துக்கொண்டிருக்கையில் அக்கவிவாணன் அரசனைப்பார்த்து, நாமகளாகிய சரஸ்வதி கவிவாணர்களிடத்தில் தங்கியிருப்பதால் பூமகளாகிய இலட்சுமி அவளோடுபிணங்கி ஒத்து இருப்பதில்லை; இலட்சுமி மாமியும் சரஸ்வதி மருகியுமாதலால், மாமியும் மருகியும் உலகவழக்கில் ஒத்துவாழ்வது துர்லபமாயிருத்தல்போல் ஒருவனிடத்து நாமகளும் பூமகளும் ஏககாலத்து ஒருமித்திருப்பதில்லை என்றான். இதனால் அவ்வரசனிடத்துச் செல்வ நாயகியாகிய பூமகளிருந்த காரணத்தினால் நாமகளாகிய சரஸ்வதி இல்லை, எனவே, அவன் மூடன் என்பதை அக்கவிவாணன் குறிப்பித்தான். இவ்விஷயமமைந்தே

"பல்லான்ற கேள்விப்பயனுணர்வார் பாடழிந்
தல்லலுழப்ப தறிதிரே—தொல்சிறப்பி
னாவின்கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின்கிழத்திபுலந்து."

என்னும் வெண்பா பிறந்திருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி யான் இன்னும் விவகரிக்கவேண்டிய அவசியமில்லை. கீழ்மக்களிடத்தும் இருக்கத்தக்க பொருட்செல்வத்தைக்காட்டினும் இகபர சாதனங்களுக்கு ஏதுவாகிய கல்விச்செல்வம் சிறந்ததென்பது என் சகோதரியாகிய காமாட்சி ஞாபகத்தில் வைப்பாளாக. ஆகவே வறுமை கவிவாணர்க்கு ஓர் வித சிறப்பைத் தருகின்றதேயன்றி அவர்களுக்கு அது எவ்வளவும் தாழ்வைத் தரவில்லை. சுத்தவீரனை ஓர் நாட்டுக்குக் கரமாகவும், மந்திரியை விவேக ஸ்தானமாகிய சிரமாகவும், கவிவாணனைத் தெய்வபக்திமுதலிய நற்குணங்கள் விளங்கத்தக்க இருதயமாகவும் மீனாட்சி உபமித்ததே உபமானம்! சுத்தவீரனுக்குரிய புஜபல பராக்கிரமத்தினும் மந்திரிக்குரிய நுண்ணறிவினும் இகத்தில் ஓர் அற்பபயனுகிய கொஞ்சகாலைய சுகங் கிடைக்குமேயன்றிப் பரலோகத்தில் நித்தியானந்தவாழ்வு எவ்வளவும் விளையமாட்டாது. வெறும் தேகபலத்தையாவது புத்தி கூர்மையையாவது ஒருவன் அபிவிருத்தி செய்துகொண்

டு தன்னுடைய இருதயத்தைப் புனிதப் படுத்திக்கொள்ளானாயின் அவன் கேவலம் மானிட விலங்கென்று பெரியோரால் இகழப்படுவான். விவேகத்தைமாத்திரம் அபிவிருத்திசெய்து, இருதயசுத்தியை விலக்கத்தக்க தல்லாதகாரணத்தினல்தான் தற்காலத்திய கல்வி அநேகரை நாத்திகப் படுகுழியில் வீழ்த்துகின்றது. உலகத்தில் கொலையாளி-கள்வன் - காமி-பொய்யன் - கட்குடியன் என்னும் பஞ்சமா பாதகருள் பெரும் பான்மையோர் தேகபலத்தில் குறைந்தவர்களா? அல்லது நுண்ணறிவில் குறைந்தவர்களா? இவ்விரண்டும் பூரணமா யமையப்பெற்றும் அத்தகைய மகா பாதகங்களை அவர்கள் செய்யத் துணிவதற்கு இருதய சுத்தியில்லாமையே காரணமல்லவா? ஆகையால் தேகபலம்-ஆண்மை இவைகளினல் போர்புரிந்து யாதொரு தேசத்தாருக்கு நன்மைபயக்கும் சுத்தவீரனையும், புத்தி கூர்மையினல் சட்ட நிரூபணஞ்செய்து யாதொரு தேசத்தார்க்கு நன்மைபயக்கும் மந்திரியையும் விட, உலகவாழ்க்கையின் அநித்தியத்தையும், ஈஸ்வரன் திருவடியின்பத்தின் நித்தியத்தையும் உலகினருக்கு விளக்கிஅவர்களுக்கு விதிவிலக்குகளையுணர்த்தி, அவர்களுடைய ஆன்மா கடைத்தேறுவதற்கான நன்னெறிகளைக்காட்டி, இருதயத்தைப் பரிசுத்தப்படுத்தும் கவிவாணனே காலத்திரயத்தும் சிறந்தவன். தேகபலம்-சௌரியம் இவைகளினலாவது விவேக விருத்தியினலாவது கடவுளைக் காணமுடியாதென்றும், நன்னெறியிலொழுகும் மெய்யடியார்களுடைய நின்மலமான இருதயத்தையே தடாகமாகக்கொண்டு பகவானது திருவடி என்னுந் தாமரை ஆனந்தத் தேன்ததும்ப மலருகின்றதென்றும் அநுபவஞானிகள் கூறியிருக்கின்றார்களல்லவா? "மனத்தினன் வாக்கான்மற்றுங் குறைவிலா வளவினலுங் கூறொணுதாகி நின்ற விறைவனர் கமலபாதம்." என்றும், "அன்பரிதயமென்னுஞ் செழுமலரோடையின் மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு தெய்வக்கஞ்சத்தொழுதகுசிற்றடி." என்றும் பகவானது திருவடி ஆன்றோரால் கூறப்பட்டுள்ள தன்மையை யோசிக்கையில் திரிகரணங்களினலும் அறியப்படாத திருவடி இருதய சுத்தியிருக்குமாகில் அங்குதோன்றும் என்று தெரியவருகிறது. ஆகையால் இருதயசுத்தியை உண்டாக்கும் கவிவாணன் புரியும் பயனே யாதொரு தேசத்துக்கு நிரந்தரமானபயன். அதுவே சத்தியமானபயன். ஒரு கொடியில்தோன்றி நின்றழியும் தேகத்தையும் அதனிருப்பிடமாய் அதைப்போலவே லயப்படும் உலகத்தையும் பற்றிய பயனும் ஒருபயனகுமா? ஒரு மந்திரி தன் தேசத்துக்காகத் தன்நுட்பபுத்தியைக்கொண்டு

செய்தசட்டநிருபணமும் விசித்திரமான ஏற்பாடுகளும் அந்தத் தேசத்துக்குமாத்திரம் அவனிருக்குமட்டுமே விசேஷமாகக் கொள்ளப்படும். அவனுக்குப் பின்வரும் வேறு மந்திரி வேறேவிதமான சட்ட நிருபணத்தையும் ஏற்பாடுகளையும் செய்துவிடுவான். அப்படியே ஒரு போரில் ஓர் பகைவனைக்கொன்ற சுத்தவீரனுடைய செய்கையை அப்போதிருந்தவர்கள் வியந்து மெச்சினாலும் அதற்குப் பிற்காலத்தவர்கள் அதைக் குற்றமானதென்று கூறவும் நேரிடும். சிறந்த கவிவாணனுடைய விதிவிலக்குகளடங்கிய கிரந்தங்களோ அப்படியல்ல. அனேக ஆண்டுகளுக்கு முன்னர் உலகினர் உய்யும்படி விதிவிலக்குகளைப் பாடிவைத்த திருவள்ளுவ நாயனாருடைய வசனங்களை எவ்வகைப்பட்ட தேசத்தவரும் மதாபிமானிகளும் மறுக்கத் துணியாரல்லவா? அனேக சட்டங்களை எழுதிவைத்த மனுமுறை இப்போது என்னாப் முடிந்தது? அவற்றில் அனேகம் தற்கால இயல்புக்கு உதவா என்று திரஸ்கரிக்கப்பட இல்லையா? இராவணேஸ்வரன் போர்க்களத்தில் நின்று தன் ஆண்மையினால் அனேகரைக்கொன்று தன் நாடாகிய இலங்கைக்கு நன்மை புரியத்துணிந்த காலத்து அசுரர்குல முழுவதும் அவனைவியந்து கூறினாரேனும் இப்போது அவனை மெச்சுவார்யாவர்? இத்தியாதி நியாயங்களினால், சுத்த வீரனுடைய செய்கையும் மந்திரிபோன்ற மதியூகிகளின் ஏற்பாடுகளும் நிரந்தரமான பயன்களைத்தரமாட்டா. யாவரும் நிராக்ஷேபனையாய் எக்காலத்தும் அன்னோர்செய்கையை வியக்கமாட்டார்களென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். வியாசர்-வான்மீகி-திருவள்ளுவர் முதலிய செந்நாப்புலவர்கள் தத்தம் தேசத்துக்குக் கிரந்தங்கள் ரூபமாகப்புரிந்த நன்மையை இன்னும் நாமனைவரும் துய்த்துவருகின்றோமல்லவா? திரேதாயுகத்தில் இந்திரஜித்துமுதலிய சுத்த வீரர்களும் சுக்ரீவனுக்கு மந்திராலோசனை சொல்லிவந்த அனுமான் முதலிய மதியூகிகளும், துவாபரயுகத்தில் அபிமன்னன் முதலிய சுத்த வீரர்களும் சகுனிமுதலிய மந்திரிகளும், தத்தம் காலங்களில் பயன்பட்டனரேயன்றி எதிர்காலத்தவர்க்கு நிரந்தரமான பயனை நேராய்ச்செய்யவில்லை. காளிதாசர்-தண்டி-கம்பர்முதலிய கவிவாணர்கள் இயற்றிய நித்தியாநித்தியத்தை விளக்கத்தக்க பாக்கள் எக்காலத்தவர்களுக்கும் பயன்பட்டுவருகின்றன. அன்றியும் யாதொரு சுத்தவீரனும் அமைச்சனும் அயர்விலா ஊக்கத்துடன் முறையே செய்துவரும் காரியங்கள் யாவும் புகழைக்கருதியேயாதலின் அப்புகழைஅவர்களுக்குக் கொடுப்பவன் கவிவாணனே யாகையால் அவ்விருவரையும் தத்தம் காரியங்களில் ஊக்-

கத்துடன் பிரவர்த்திக்கச் செய்பவன் கவிவாணனேயாம். ஆகையால்
யாதொருசுத்தவீரன் மூலமாகவும் அமைச்சன் வாயிலாகவும் யாதொரு
நாட்டுக்குண்டாகும் நன்மைக்கெல்லாம், அவர்களுடைய செய்கையை
உலகத்தார் எக்காலத்தும் ஞாபகத்தில் வைத்திருக்கும்படி பாடிப் புக
ழும் கவிவாணனே முக்கிய காரணனாயிருக்கின்றான். அல்லாமலும்
சுத்தவீரன் என்கிற ஒரு பெயரும் மந்திரி என்கிற ஒருபெயரும் கவி
வாணன் ஒருவனுக்குத்தான் பொருந்தும். எங்ஙனமெனின், தேகத்
தைப் பாதுகாக்கும் நிமித்தம் பகைவர்களை வெல்லும் சாமானிய
சுத்த வீரனைக்காட்டிலும், விதிவிலக்குகளை நமக்குப் புகட்டியும், மா
யா காரியங்களாகிய காம வெகுளிமுதலிய பெரும்பகைவர்களைத் தெ
ய்வபக்தி விளையத்தக்க கவிகளென்னும் வாளாயுதத்தால் சேதித்து
ஆன்மாக்களாகிய நமக்கு நித்தியானந்த வாழ்வைத் தேடிக்கொடுக்கும்
கவிவாணனுக்கே சுத்தவீரன் என்னும் பெயர் திரிகாலத்தும் தகும்
தகும். தேகம் சுகித்துக் கொஞ்ச காலமட்டும் வாழ்வதற்கான சட்ட
ங்களை ஏற்படுத்துவதற்கு வேண்டிய சிற்றறிவு உடையவனாகிய ஒரு
வனைவிட ஆன்மாக்கள் கடைத்தேறும் வண்ணம் விதிவிலக்குகளையு
ணர்த்தி அவைகள் பாசபந்தங்களுக்கு உட்படாவகை சூட்சி உரைக்
கும் மதியூகியாகிய கவிவாணனே அமைச்சன். அமைச்சனென்னும்
பெயர் கவிவாணனுக்குத்தான் காலத்திரயத்தும் அமையும் அமை
யும். மேற்போந்த நியாயங்களினால் கவிவாணனே ஏனைய இருவரைக்
காட்டிலும் யாதொரு தேசத்துக்கு உண்மையில் நிரந்தரமான பெரு
ம்பயனை அளிப்பவனாகின்றானென்பது என்சித்தாந்தம்.

இவ்வற்புதமான உபந்நியாசம் முடிந்தவுடனே அங்கிருந்த யாவ
ரும் ஆனந்த மேலீட்டினால் கரகோஷ்டம் செய்தனர். மீனாட்சியும்
காமாட்சியும் விசாலாட்சி கூறியதே சரிசரி என்று ஒப்புக்கொண்டனர்.
பிறகு சபாநாயகியாக வீற்றிருந்த மங்கையர்க்கரசி எழுந்து அடியில்
வருமாறு சொல்லத்தொடங்கினாள்:—

மங்கையர்க்கரசிசெய்த உபந்நியாசம்.

என் அருமைப் புதல்விகளே! உங்கள் தாயாகிய நானன்றி வே
றே யாவரேனும் இந்த ஸ்தானத்தில் இப்போது இருந்திலரே என்று
துக்கிக்கின்றேன். எவ்வளவு வழுவாசகங்களை நீங்கள் உரைத்திராயினு
ம் நீங்கள் மக்களும் நான் தாயுமானபடியால் அவையெல்லாம்-

"மக்கள்மெய்தீண்ட லுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ்செவிக்கு."

என்றபடி என்செவிக்கு இன்பமாகத்தானிருக்கும். ஆயினும் நடுவுநிலைமையுடன் யான் இப்போது சில வசனங்களைச் சங்கிரமமாகச் சொல்லி முடிக்கின்றேன். மீனாட்சியும் காமாட்சியும் முறையே எடுத்துக் காட்டிய விஷயங்கள் யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கனவேயாயினும், விசாலாட்சி எடுத்துக்காட்டிய அதி அற்புதமான நியாயங்களை மறுக்க எவராலும் முடியாது. இராமாயணத்தில் ஓர் விஷயம் என் ஞாபகத்துக்கு வருகின்றது. உலக மாதாவாகிய ஜானகியாரைத்தேடிச் சென்ற அனுமான் பிராட்டியாரை இலங்கையில் கண்டபோது இரகுநாதரது விருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டே வருகையில்,

"கொற்றவர்க்காண்டுக்காட்டிக் கொடுத்தபோதடுத்ததன்மை
பெற்றியினுணர்தற்பாற்றோவுயிர்நிலைபிறிதுமுண்டோ
இற்றைநாளளவுமன்னாவன் றுநீயிழிந்தீந்த
மற்றைநல்லணிகள்காணின்மங்கலங்காத்தமன்றே."

இராஜாதி ராஜாகிய ஸ்ரீராமபிரபுவுக்கு அப்போது நாங்கள் உன்னாபரணங்களைக் காட்டித்தந்தபோது அவருக்குண்டான பெருமகிழ்ச்சியை இன்னதென்று உணரமுடியுமோ? அந்த ஆபரணங்களைவிட அவர்க்கு வேறு உயிர்நிலை தானுண்டோ? அன்னாய்! இது பரியந்தம் அவர் உயிர்தரித்திருப்பது அன்று நீ கழற்றிபெறிந்த ஆபரணங்களினால்தான் என்று அறிக, ஆகையால் அந்த ஆபரணங்களே இரகுநாதனைப் பிழைத்திருக்கும்படி செய்தன, எனவே, உன்மங்கலநாணைக்காத்தன என்று அனுமான் கூறினர்.

மங்கலநாண் ஒன்றே யாதொரு ஸ்திரீ ஏனைய ஆபரணங்களைத் தரிப்பதற்குக் காரணமாய் நின்று அவற்றிற்கு ஆதாரமாயிருப்பது உலக இயல்பாயிருக்க, ஏனைய ஆபரணங்கள் பிராட்டியாரது மங்கல நாணைக்காத்தது வியப்பென்று அனுமன் சொல்லியதுபோலிருக்கிறது விசாலாட்சிசெய்த உபந்நியாசம். தேகபலத்தில் மிக்க சுத்தவீரனும் மந்திராலோசனையில் வல்ல மதிநுட்பியாகிய அமைச்சனுமே நாட்டாரைக் காப்பதுமேயன்றிக் கவிவாணனையும் காப்பாற்றிவருவது பிரத்தியட்ச அனுபவமாயிருக்க, அவ்விருவரையும் தேசத்தாரையும்பொதுவாய் உலகத்தில் யாவரையும் காக்கவல்லவன் கவிவாணனே என்று விசாலாட்சி பிரசங்கித்த அருமையே அருமை! எதிர்வாதம்பேசிவந்த மீனாட்சியும் காமாட்சியுமே அதை ஒப்புக்கொண்டு தம் கட்சி சாய்ந்ததென்று

சொல்வார்களானால் அதை மறுக்கவல்லவர் யாவர்? இப்போது நடந்த சம்பாஷணையினால் தன் நாட்டுக்குப் பெரும் பிரயோசனத்தை விளைப்பவன் கவிவாணனே என்பது சர்வ சம்மதமாயிற்று.

அப்போது அங்கிருந்த தோழிமார்களில் ஒருத்தி எழுந்து அடியில் வருமாறு கூறலாயினள்:—

அருமைச் சிமாட்டிகளே! கல்வியிற் சிறந்தவர்கள் ஒருங்கு கூடி அழுக்காறு முதலிய தீக்குணங்களின்றிக் கூரறிவுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அவர்கள் மத்தியிலிருந்து அடையும் ஆனந்தத்தைவிட சொர்க்கலோகத்தில் அதிக ஆனந்தம் இருக்குமாயின் அங்கு போய்ப் பார்ப்போம் என்னும் பொருளமைந்த

"தவலருந்தொல்கேள்வித்தன்மையுடையா
ரிகலிலரெஃகுடையார் தம்முட்குழீஇ
நகலினினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்பருறைவார்பதி."

என்னும் வெண்பாவின் கருத்தை இன்று நான் அனுபவசித்தமாகக் கண்டு தெளிந்தேன். பெண்கள் கல்விபயில்வதானால், இப்போது சொற்சுவை பொருட்சுவை தோன்றஉபந்நியாசித்த வனிதாரத்தினங்களைப் போல் பயிலவேண்டும். "பெட்டைக்கோழி முட்டையிடும்." என்பது போன்ற உதவியற்ற சில சொற்றொடர்களை எழுத்துக்கூட்டிப் படிக்கவும், "ஞாகறத்துரம் அமால்" என்று தடுமாறி எழுதவும் தெரிந்துகொண்டு கல்வியிற் கரைகண்டுணர்ந்தவர்கள்போல் இறுமாந்து ஆடவரை மதியாது கிடக்கும் அற்பப்பேதைகளின் கல்வியும் ஒரு கல்வியாகுமா? ஆகையால் இந்தத்தேசத்திலுள்ள பெண்கள் யாவரும் என் நாயகிமாராகிய மீனாட்சி அம்மாள்-காமாட்சி அம்மாள்-விசாலாட்சி அம்மாளைப்போல் கல்விபயின்று நல்லொழுக்க முடையவர்களாகி இருப்பாராக. கல்வியும் ஒழுக்கமும் இருப்பதோடுங்கூட நடுவுநிலைமையும் அமைந்திருக்கவேண்டியது. பிறர் நம்வயதிற் குறைந்தோராயினும் அவர்கள் கூறுவது உசிதமாகத்தோற்றிய காலத்துப் பிடிவாதத்தை அறவே விடுத்து அதை நன்கு மதித்தலாகிய சற்குணமும் இம்மாது சிரோன்மணிகளிடத்து விளங்கியதுபோல் யாவரிடத்தும் விளங்கக் கடவதென்று ஜகதீசனைப்பிரார்த்திக்கின்றேன்.

பின்னர் யாவரும் கரகோஷ்டத்துடன் உத்தியானவனத்தைவிட்டுத் தத்தம் இருப்பிடம் போய்ச்சேர்ந்தனர்.

ஜெர்மனிதேசத்துச் சக்கிரவர்த்தியும் ஆடுமேய்க்கும் சிறுவனும்.

ஜெர்மனிதேசத்தை அரசாண்டுவந்த சக்கிரவர்த்தி ஒருவர் முன்னொருகாலத்தில் ஓர்நாள் தன் அரண்மனையை விட்டுப் பரிவாரத்துடன் காட்டில் வேட்டையாடச் சென்றார். அன்றையதினம் அவர் அதிவேகமாய் வேட்டையாடிக்கொண்டு போனபடியினால் அவருடன்வந்த பரிவாரங்கள் அவரைத்தொடரமாட்டாமையால் பின்தங்கிவிடலாயின. நெடுநேரமாய்விட்டபடியால் பசிதாகத்தினாலே மிகவும் வருந்திய அச்சக்கிரவர்த்தி மீண்டும் தம்முடைய அரண்மனைக்குப்போகும் வழி தெரியாமல் திகைத்து அயர்ந்து சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கையில் அங்கு ஆடு மேய்த்துக்கொண்டிருந்த ஓர் சிறுவனை நோக்கி அவனுடன் அடியில் வருமாறு சம்பாஷிக்கலாயினர் :—

சக்கிரவர்த்தி.—பிள்ளாய்! சமீபத்தில் ஏதாவது கிராமம் இருக்கிறதா? அதற்கு வழி எப்படி?

சிறுவன்.—ஐயா! சமீபத்தில் ஓர் கிராமமிருக்கிறது. இதோ போகிற கால்வழிதான் அதற்குப்பாதை. ஆனால் இடையில் கல்லும் முள்ளும் புதரும் இருக்கிறபடியால் வழி முழுவதும் நன்றாயிராது. தங்களையொத்த அன்னியர் ஒருவேளை வழிதப்பிப் போகக்கூடும்.

சக்கிரவர்த்தி.—பிள்ளாய்! எனக்கு அதிகபசியாயும் தாகமாயும் இளைப்பாயும் இருக்கிறது. என்னுடன் கூடவந்தவர்களெல்லாம் பின்னே நின்று விட்டார்கள். என் ஊருக்குப்போவதற்கோ எனக்கு வழி தெரியவில்லை. நீ சமீபத்திலிருப்பதாகச் சொல்லுகிற கிராமம்வரையில் என்னைக் கொண்டுபோய்விடு. உனக்குத்தக்கவாறு சன்மானம் செய்கிறேன்.

சிறுவன்.—ஐயா! என் ஆடுகளைவிட்டு நான்வரலாமா? அவற்றில் ஏதுவாவது காட்டில் நுழையுமானால் தோண்டான் விழுங்கிவிடும். அல்லது அவற்றைத் தனியே விட்டுப்போனால் திருடர்கள் வந்து தூக்கிக்கொண்டுபோய் விடுவார்கள். பிறகு நான் என்னசெய்வேன்?

சக்கிரவர்த்தி.—ஒன்று இரண்டுபோனால்தான்என்ன? இவ்வாடுகள் உன்னுடையனவல்லவே? மேலும் இவ்வளவு பெரிய மந்தையில் ஒன்று இரண்டு காணாமற்போய்விட்டால் உன் எஜமானனுக்குத் தெரியப்போகிறதா? அது அவனுக்குப் பெருத்த நஷ்டம் ஆகுமா? இங்

த ஆடுகளை மேய்ப்பதற்காக வருஷம் முழுமைக்கும் உனக்கு எவ்வளவு கிடைக்கிறதோ அதற்கு அதிகமாய் உன் பிரயாசைக்காக நான் பொருளுதவி செய்கிறேன். சீக்கிரம் கூடவா.

சிறுவன்.—ஐயா! தங்களைப்பார்த்தால் பெரியவராகத் தோன்றுகிறது. யான் இவ்விடத்தை விட்டு எவ்வளவும் பெயரேன். ஒருநாள் முழுவதும் இவற்றை மேய்ப்பதற்காக என் எஜமானன் எனக்குக் கூலிகொடுத்து என்னை நம்பி இவற்றை என் வசத்தில் ஒப்பித்திருக்கிறார். நான் எத்தனை மணிநேரம் வேலைசெய்வதற்காக அவரிடத்தில் கூலிபெற்றுக் கொள்ளுகிறேனோ அந்த காலவரையறைக்குள் எவ்வளவு நேரமாவது என்வேலையை விடுத்து வேறுவேலையைச் செய்வேனாகில் என் எஜமானனுக்கு நான் துரோகியாக மாட்டேனா? அப்படி வேறே வேலையாயிருக்கும் நேரத்தில் இரண்டொரு ஆடுகள் காணாமற்போய்விடுமானால் நான் என் எஜமானனுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்தவனாகேனா?

சக்கிரவர்த்தி.—ஆம். சரிதான், இவ்வாடுகளை என் இடத்தில் நம்பிவிட்டுவிட்டு அடுத்த கிராமத்திற்கு அதிசீக்கிரமாய்ப்போய் ஒரு சொம்பில் கொஞ்சம் தண்ணீரெடுத்துக்கொண்டு, என்னை அவ்விடத்திற்கு இட்டுக்கொண்டு போவதற்காக ஒரு ஆளையாகிலும் அழைத்துவா.

சிறுவன்.—நான் மாட்டேன். என் ஆடுகளுக்கு உம்முடைய குரல் தெரியாது. அவை இங்கும் அங்கும் ஓடுமாகில் உம்முடைய குரலொலியால் அவற்றை மடக்க முடியாது. மேலும்—

சக்கிரவர்த்தி.—போதும். அம்மட்டும் நிறுத்து. என்ன! அடா! என்னை நீ நம்பாயோ? என்னைப்பார்த்தால் திருடனைப்போலவா உன் கண்ணுக்குத்தோன்றுகிறது?

சிறுவன்.—ஐயா! கோபித்துக்கொள்ளவேண்டாம். என் வேலையைவிட்டுப் போகும்படிசெய்து என் எஜமானனுக்கு என்னைத் துரோகியாக்க முயன்ற உங்களிடத்தில் எனக்கு நம்பிக்கையில்லையே. என்ன செய்வேன்? நான் இல்லாதபோது என் ஆடுகளை ஜாக்கிரதையாய்ப் பாது காத்திருப்பதாக வாக்குதத்தம் செய்யும் நீர் வேறே யாராவது வந்து, இப்போது என்னை நீர் கேட்பதுபோல் ஏதேனும் வேலைசெய்யும்படி உம்மைக் கேட்டுக்கொண்டால் இவற்றை விட்டுவிட்டுத் தானே போய் விடுவீர்? ஆகையால் உம்மை நான் எவ்வளவும் நம்பமாட்டேன்.

ழராஜாக்களுக்குள்ளே மநுநீதிகண்டசோழர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவித்து, செங்கோல் நடாத்தி அரசியற்றிவரும் நாளில், அவர் செய்த புண்ணிய மிகுதியினாலே அவருக்கு ஒரு நல்ல புத்திரன் பிறந்தான். அவன் பல கலைகளையும் கசடறக்கற்று வல்லவனாகி அறிவொழுக்கங்களிற் சிறந்து, இளவரசு ஆவதற்குத் தக்க பருவத்தை யுடையவனாய்வாழுநாளில் ஒரு நாள் இராஜமாளிகையினின்றும் புறப்பட்டு அரசகுமாரர்களும் சேனைகளும் சூழ்ந்துவரத் தேரிலேறி வீதியிற்சென்றான். அவ்வாறு செல்லும்பொழுது வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டுபோய் அந்தத் தேர்ச்சகடத்தின் அடியில் அகப்பட்டிறந்தது. அதுகண்ட தாய்ப்பசு ஓடிவந்து, அலறி உடல் நடுங்கிச் சோர்ந்து கீழே விழுந்து புரண்டு பெருங் கூச்சலிட்டது. சோழபுத்திரன் அதுகண்டு, ஓ! ஓ! அபாயம் வந்துவிட்டதேயென்று மனந்தடுமாறி, பெருந்துயரில் மூழ்கி அறிவழிந்து தேரினின்றும் கீழே அடியற்ற பனைபோல் வீழ்ந்தான். அலறுகின்ற தாய்ப்பசுவைப்பார்த்து உயிர் பதைத்துச் சோர்ந்தான். இறந்து கிடக்கின்ற இளங்கன்றைப்பார்த்து பெருமூச்சுவிட்டு இரங்கினான். நான் பிறந்தது என்னுடைய தந்தையாருக்கு இப்பெரும்பழி தேடிவைப்பதற்கோ? என்று கலுழ்ந்தான். பிறந்த குலத்துக்குப் பெரும்புகழ் சம்பாதித்து வைப்பதற்குப் பிரதியாக நான் என்றும் அழியா அபகீர்த்தி தேடிவைத்தேனே! என்றான்.

"எழுபிறப்புந்தீயவை தீண்டாபழிபிறங்காப்
பண்புடைமக்கட்பெறின்."

என்னும் முதியோர் வாக்குக்குமாறாக நடந்து பெரும்பாவத்துக்குள்ளானேனே! என்றான். மகன் தந்தைக்குச்செய்யும் உபகாரமாவது-இவனைப் பெறுதற்கு இவன் தந்தை யாது தவஞ்செய்தானோ என்று உலகத்தார் கொண்டாடும்படி நடந்துகொள்ளுவதன்றோ? இவ்வாறு பலபலவாகயோசித்து மனந்தளர்ந்து, இனிச்சிந்தித்து நைவதில் யாதும்பயனில்லை, அபுத்தி பூர்வகமாகச்செய்த இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் ஏதேனும் உளதாயின் என்தந்தையார் அறியுமுன்னமே பிராமணர் விதிக்கும் பிரகாரஞ் செய்துகொள்ளல்வேண்டும் என்று தீர்மானித்துப் பிராமணரிடத்தே சென்றான். தன் கன்றையிழதந் தாய்ப்பசு அத்துயரத்தைச் சகிக்கமாட்டாது கண்ணீர் ஒழுகச்சென்று இராஜமாளிகை வாயிலிற் கட்டியிருக்கும் ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடித்தது. அதுகேட்ட மநுநீதிகண்டசோழர் திடுக்கிட்டு சிங்காசனத்தினின்றும் இறங்கி விரைந்துவந்து கடைவாயிலையடைய, வாயிற் காவலாளர்கள் எதிர்வந்து வணங்கி மஹாராஜாவே! இங்கே ஒருபசுவந்து ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால்அடித்தது என்று விண்ணப்பம் செய்தார்கள். மநுநீதிகண்டசோழர் அதுகேட்டு வருந்தியலறுகின்றபசுவைப்பார்த்து இதற்கு யாதுஇடை

யூறு சம்பவித்தது? என்று மந்திரிகளைக் கோபித்துப்பார்க்க, அம்மந்திரி
களுள் ஒருவன் வணங்கிநின்று, பூமண்டலேஸ்வரா! உம்முடைய புத்தி
ரன் தேர்மேலேறி வீதியிற் போம்பொழுது ஒரு பசுக்கன்று துள்ளி
யோடிவந்து அத்தேர்க்காலில் அகப்பட்டிறந்தது, அதன் தாயாகிய இ
ப்பசு இங்குவந்து ஆராய்ச்சிமணியை அடித்தது என்று விண்ணப்பஞ்
செய்தான். அதுகேட்ட மநுநீதிகண்டசோழர் பெருந்துயரங்கொ
ண்டு இரங்கி ஏங்கி, கன்றையிழந்ததாய்ப்பசுவின் முகத்தைப்பார்த்து
உள்ளம்பதைத்து என் செங்கோன்முறைமை நன்று! நன்று! என்றார்.
இதுயாது செய்தாற்றீரும் என்றார்.

"ஆடுங்கடைமணி நாவசையாமலகிலமெல்லாம்
நீடுங்குடையைத்தரித்தபிரான்."

என்று உலகத்தோர் போற்றும்படி இதுவரையில் அரசு செய்துவந்த
எனக்கு இன்று ஒரு பிள்ளையால் அபகீர்த்திவந்து சம்பவித்ததே!
என்று மனந்தளர்ந்தார்.

"அல்லற்பட்டாற்றாதழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்படை."

என்னும் சான்றோர் வாக்கின்படி, அரசன் நீதிவழுவாமல் முறைசெய்
யாதபடியால், குடிகள் துன்பப்பட்டு அதனைப் பொறுக்கமாட்டாமல்
அழுதகண்ணீர் அரசன்செல்வத்தைத் தேய்க்கும் படையாயிற்றே! எ
ன்றார். இவ்வாறு துக்கக்கடலில் மூழ்கி ஒன்றுந் தோன்றாமல் தியக்க
மடைந்திருக்கும் சோழமஹாராஜாவை மந்திரிகள் நோக்கி, எம்மரசே!
மனந்தளர்ந்து ஏக்கமுறுவது இதற்குப் பரிகாரமாகாது, கோவதைக்கு
த் தருமநூல்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தை உம்முடையபு
த்திரனைக் கொண்டு செய்விப்பதே தருமம் என்றார்கள். அதற்கு மநு
நீதிகண்டசோழர் நீங்கள் கூறும் பிராயச்சித்தம் கன்றை யிழந்தல
றும் இப்பசுவின் துக்கநோய்க்கு மருந்தாகுமா? நான் ஏகபுத்திரனை
இழக்கின்றேன் என்று கருதி நீங்கள் எல்லோரும் சொல்லிய இவ்வார்
த்தைக்கு நான் இசைந்தேனாயின் நடுவுநிலைமைதவறாதா? உயிர்களுக்
குத் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும் ஏ
னையஉயிர்களாலும்வரத்தக்க ஐந்து பயத்தையும் நீக்கி அவைகளைக் கா
ப்பவனன்றோ அரசனெனப்படுவான்? நான் என்புத்திரன்செய்த பாவத்
தின்பொருட்டு பிராயச்சித்தஞ்செய்வதற்கு உடன்பட்டுப் பிறனொரு
வன்செய்த பாவத்திற்கு அவனைக்கொல்வேனாயின், பூர்வம் மநுவினால்
செய்யப்பட்ட தருமநூல்விதி என்னால் கடக்கப்பட்டதென்னும் பழி
மொழி உலகில் என்றும் நிலைபெறாதா? என்றார். அப்போது, மந்திரி
கள் சித்தங்கலங்கி, மஹாராஜாவே! இவ்வுலகில் இதுபோல் முன்னும்
நடந்திருக்கின்றதே, இக்குற்றத்தின் பொருட்டு உம்முடைய புத்தி
ரனைக் கொல்லுதல் முறையன்று, தருமநூலில் விதிக்கப்பட்ட பிரா
யச்சித்தஞ் செய்வதே பண்டுதொட்டு மேலோர் வழங்கிய கொள்
கை என்றார்கள். அதற்கு மநுநீதிகண்டசோழர் நீங்கள் தரும நெறி

யின் உண்மையைச் சிறிதும் சிந்தியாது பேசுகின்றீர்கள். எந்தக்காலத்திலே எந்தப்பசு கன்றையிழந்த துயரத்தினால் வந்து ஆராய்ச்சிமணியை அடித்தது சொல்லுங்கள், ஆதலால் என் புத்திரனைக் கொல்வதே துணிபொருள் என்று சிந்தியுங்கள், நான் இப்பசுவின் துயரத்தை நீக்க வல்லவனல்லேன், ஆகையால் இப்பசு தன் கன்றையிழந்து துயருறுதல்போல் நானும் என் புத்திரனை இழந்து துக்கப்படுதலே நீதி என்றுகூறி எவ்விடத்தும் எக்காலத்தும் யாவராலும் செய்தற்கரிய செய்கையைச் செய்யத்துணிந்தார். உடனே மந்திரிகள் அஞ்சி அவ்விடத்தினின்றும் நீங்கினார்கள். பின்னர் மநுநீதிகண்டசோழர் தம்முடைய புதல்வனை அங்குவரவழைத்து ஒரு மந்திரியைப்பார்த்து நீ இந்தப்பிள்ளையை வீதியிலே கிடத்தி மேலே தேரைச்செலுத்தக் கடவாய் என்று கட்டளையிட்டார். அந்த மந்திரிபோய் அவ்வாறுசெய்ய மனஞ்சகியாமல் தன்னுயிரை விடுத்தான். அதனை உணர்ந்து மநுநீதிகண்டசோழர் தம்முடைய அருமைப் புத்திரனைத் தாமே கொண்டு வீதியிற்சென்று, தம்குலத்துக்கு ஒருபுத்திரனே இருக்கின்றான் என்பதைச் சிந்தியாது, தருமவழி நடத்தலொன்றையே உறுதியாகக்கொண்டு அவனைக்கீழே கிடத்தி அவன்மார்பிலே தேருருளை அழுந்தும்படி நடத்தினார். சோழர்செய்த இச்செயற்கருஞ்செய்கையைக் கண்டு அங்கு சூழ்ந்திருந்த மனிதர்யாவரும் மனம் சகியாதவர்களாய்க் கண்மாரிபொழிந்தார்கள். அப்போது சர்வஜீவ தயாபரராகிய கடவுள் அங்கெழுந்தருளிவந்து முன்னின்றார். சோழர் அவரைத்தரிசித்து, சர்வலோகநாதனே! சர்வாந்திரியாமியே! சகலகல்யாணகுணபரனே! அன்பர்கள் வைப்பே! அருட்பெருங்கடலே! ஆனந்தப்பொருளே! என்று மனமுருகித்துதித்து வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கிப்பரவசப்பட்டுநின்றார். அப்பொழுதே பசுக்கன்றும் இராஜகுமாரனும் மந்திரியும் உயிர்பெற்றெழுந்தனர். அதுகண்டசோழர் அற்புதமடைந்து தாம் இத்தன்மையினொன்று அறியாதவராயினர். அவர் தமது பாதத்தில் வந்து வணங்கிய புத்திரனைத்தழுவி மனமகிழ்ந்தார். பசு தன் கன்றைக்கண்டு அடங்காப் பெருமகிழ்ச்சிகொண்டு உடல் பூரித்துத் தன் கன்று உண்ணும்படிக்குப் பாலைச் சுரந்து துயர் நீங்கிற்று. அங்கெழுந்து காட்சிதந்த ஜகதீசன் மநுநீதிகண்டசோழருக்கு மேற்கண்டபடி கிருபைசெய்து மறைந்தருளினார்.

"யார்க்குமுன்னவனே முன்னின்றால் முடியாதபொருளுளதோ?"

ஆகவே முற்காலத்திய இந்துதேசத்து அரசர்கள் எவ்வகைப்பட்ட உயிர்களையும் ஒருபடித்தாய் மதித்து வந்தனரேயன்றி உயர்வு தாழ்வு பாராட்டி வந்திலரென்றும், சுயப்பிரயோசனத்தை எவ்வளவுங் கருதிலரென்றும், குடிகள் அவ்வரசர்களைத் தெய்வமாகப்பாவித்து வந்தார்களென்றும், அவ்வரசர்கள் நீதிசெலுத்துகையில் அவர்களுக்குப்பூரணமாய்த் தெய்வானுகூலமிருந்ததென்றும் தெளிவாய் விளங்குகின்றது.

குற்றத்தை ஒப்புக்கொள்வது பெருந்தன்மைக் கடையாளம்.

உலகத்தில் மானிடப் பிறவிபெற்ற ஒவ்வொரு ஆன்மாவும் புத்தி பூர்வகமாகவேனும் அபுத்தி பூர்வகமாகவேனும் எப்போதாவது பிழை செய்வது இயற்கை. ஒருவன் எக்காலத்தும் எவ்வகைப்பட்ட பிழையையும் செய்யாதிருப்பானேயாயின் அவன் மானிட இயற்கைபெற்றவனே அல்லன். அவனைக்கடவுளென்றே கூறவேண்டும்.

"குறைகளே செய்வதெங்குணமெனக்கண்டனம்
பொறைகளே செய்வதுன்புகழெனக்கண்டன
மிறைவமற்றிவ்விரண்டேயலால்யாமெடுத்
தறைவதொன்றில்லையாலன்றுதொட்டின்றுமே.'

என்று பொறிவழியிற்செல்லா உளத்தினராகியும், புண்ணியத்தைச் செய்வதே பெரும் விரதமாகக் கொண்டவராகியும், கனவிலுங் கடவுளின் திருவடியை மறவாநேசமுடையவராகியுமுள்ள மூதறிஞரே பகவானை நோக்கி மேற்காட்டியபடி பிரார்த்தித்தனரென்றால் நம்போலியரிடத்துக் குற்றமிருப்பதற்கு ஐயம் யாது? எவனொருவனுக்குத் தன் பிழைகள் புலப்படுகின்றனவோ அவனே தன்னை யறிந்தவனென்றும் விவேகியென்றும், அங்ஙனம் புலப்படாத ஒருவனைத் தன்னை யறியாதவனென்றும் அவிவேகியென்றும் பெரியோர் கூறாநிற்பர். ஒரு கோட்டைக்குள்ளிருக்கும் அரசன் அதன் பலஹீன ஸ்திதியை அறிந்துகொண்டவிடத்தல்லவா அதனைப் பகைவர் கைப்பற்றாவண்ணம் விரைவில் பலப்படுத்திக்கொள்ள முயலுவான்? அதுபோல் தன் குற்றங்களை எவன் சித்த சமாதானத்துடன் அறிந்தனனோ அவனே அவற்றைக்களைய முயலுவான். அனேகர் தாங்கள் பெரும்பிழைகள் புரிந்தும் அவற்றையுணராமலும், ஓர் கால் உணர்ந்தவிடத்தும் அவற்றைப்பிறர் முன்னிலையில் ஒப்புக்கொள்ளாமலும் தாம் பிடித்தமுயலுக்கு மூன்றே காலெனக் குதர்க்கம் பேசாநிற்பர். இவர்களை மானிடப் பதடிகளென்றே அறிவுடையோர் காற்கடை கொண்டொதுக்குவர். மானிட இயல்புக்குப் பிழைபுரிவது இயற்கை என்பதையுணர்ந்த சாதுக்கள் அவற்றை ஒளியாமல் ஒப்புக்கொள்வதுதான் பரமபுருஷார்த்தம் என்றேகூறுவர்.

"பொன்செய்வாணிகர்போலெவ்வழியானும் புண்ணியமீட்டினமறிஞர்
கொன்செய்பாதகமே புரிந்தனமின்றாட்குறுகுவதென்றெனவிரங்க
முன்செய்தீவினையோகனவிலுமறமேமொழிகிலேன்களித்திருக்கின்றே
னென்செய்கோமறலிக்கென்கரத்திருக்குமீசனேமாசிலாமணியே."

குற்றங்களையுணர்ந்து ஒப்புக்கொள்பவரே மேலோரென்றும் அவற்றையுணராமலும் ஒப்புக்கொள்ளாமலுமுள்ளார் கீழோரென்றும் இப்பாசுரத்தால் நன்குவிளங்குகிறது. மகா அலெக்ஸாந்தர் என்னும் மன்னர் பெருமான் அரசுபுரிந்துவந்த காலத்தில் ஓர்நாள் குற்றவாளிகள்

அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையைப் பார்க்கும்படி தனியே புகுந்த காலத்து அங்கிருந்த குற்றவாளிகளின் பெருந்தொகையைக்கண்டு மனம்பதைத்து, அந்தோ! நம் அரசாட்சியில் துஷ்ட்டர்கள் இத்தனைபெயர் இருக்கிறார்களா? என்று தனக்குள்வியந்து, அவர்களைத் தனித்தனியே அழைத்து, அவனவன் என்னென்ன குற்றத்துக்காக அடைக்கப்பட்டானோ அதை அவனவன்வாய்மொழியைக்கொண்டே அறிந்துகொள்ளத் தொடங்குகையில், ஒருவனாவது யாதொரு குற்றத்துக்காகத்தான் அங்குகொண்டுவரப்பட்டானென்பதைச் சொல்லவே இல்லை. ஒவ்வொருவனும் தான் நிரபராதியா யிருந்தானென்றும், வேறொருவன் செய்த ஏதோ ஒரு குற்றத்துக்காகத் தான் தெண்டிக்கப்பட்டானென்றும், நியாயாதிபதிகள் விசாரணை சரியாய் நடத்தவில்லை என்றும், எதிர்வாதி தப்பு சாட்சிகளைக்கொண்டுவந்து ஏதோ ஒருபொய்யை மெய்யாக என்பித்தானென்றும், எவனோ தன்னை வஞ்சித்தானென்றும் பலவாறாக அவனவன் சமாதானம் சொல்லிக்கொண்டேவந்தான். கடைசியாக அங்கிருந்த ஒரு குற்றவாளியாகிய பெண்பிள்ளையைப்பார்த்து, அரசன் நீ என்னகுற்றம் செய்தாய்? என்றான். அதற்கு அவள்-நான் ஜீவனத்துக்கில்லாமல் திருடினது வாஸ்தவம்தான், அதற்காக என்னை இச்சிறைச்சாலையில் வைத்திருப்பது நியாயம்தான் என்றாள். அதைக்கேட்டு அரசன்-சீ! சீ! இவ்வளவு சத்புருஷாள் இத்தனைபெயர்கூடி இருக்கிற இந்த இடத்திலே திருடியாகிய நீ இருக்கக்கூடாது, ஓடிப்போ என்று அவளைத் துரத்திவிட்டனன். அச்சிறைச் சாலையிலிருந்த அத்தனை துஷ்ட்டர்களும் தங்கள் குற்றத்தை யுணராதவர்களாயும், உணர்ந்தும் ஒப்புக்கொள்ள மனமில்லாதவர்களாயும் இருந்த காரணத்தினால் அரசன் அவர்களை அவ்விடத்திலேயே அவர்களுக்குப் புத்திவருமளவும் இருக்கச்செய்தும் அவர்களைப் புகழ்வதுபோல் இகழ்ந்தும், தன் குற்றத்தை உள்ளபடி அறிந்து ஒப்புக்கொண்ட பெண்பாலை இகழ்வதுபோல் புகழ்ந்தும் சிறைச்சாலையிலிருந்து வெளிப்படுத்தியும் அரசன் தன் இருப்பிடம்போய்ச் சேர்ந்தான். ஒருவன் தன் குற்றத்தை யுணராமலும் ஒப்புக்கொள்ளாமலும் இருப்பதுபோலவே பிறர் விஷயமாகவும் இருப்பானாயின் அவனைக் குணவானாகவே எண்ணுதலும் நியாயமாகும். தன்குற்றத்தில் குருடனாயும், பிறர் குற்றத்தில் இந்திரனைப்போல் உடம்பெல்லாம் கண்ணுடையவனாயும், அது கடுகளவேயாயினும் அதை மலைபோல் பிரசித்தப் படுத்துபவனாயும் இருத்தல் என்ன அநியாயம்!

“ஏதிலார்குற்றம்போற் றங்குற்றங்காண்கிற்பிற்
தீதுண்டோ மன்னுமுயிர்க்கு.”

என்னும் அருமைக் குறட்பாவின் கருத்தை ஒவ்வொருவரும் அறிந்து ஒழுகுவாராக.

சமாச்சாரம்.

புகைக்கூடு.—பிரென்சுதேசத்து ஜோவிஸ் என்னும் கனவானொருவர் ஓர் அற்புதமான ஆவிக்கூட்டைச் செய்துவருகிறார். அது 200-அடி உயரமுள்ளது. ஒருமணிநேரத்தில் ககனமார்க்கமாய் 70-மைல் போகத்தக்கது. அதில் தானும் தன் நண்பர்களும் ஏறி வெகுசீக்கிரத்தில் யாத்திரை செய்யப்போகிறார்களாம்.

இரட்டைப்பிள்ளை.—இங்கிலாந்தில் ஒருத்தி இரட்டைப்பிள்ளை பெற்றிருக்கின்றாள். இரண்டு உடல்களும் ஒன்றாகப் பொருந்தியிருக்கின்றன. அவற்றைப் பிரிக்கமுயல்வது இரண்டுக்கும் பிராணச் சேதமுண்டாக்குமென்று கருதி டாக்டர்கள் சும்மா வைத்திருக்கின்றார்கள். அவை வெகுநன்றாய் வளர்ந்து வருகின்றன. அவ்விரண்டும் உலகத்தில் சஞ்சரிப்பது எப்படியோ?

பசியாதவர்.—அமெரிக்காவில் டாக்டர் டர்னர் என்பவர் பசியெடுக்காதவரென்று பெயர்பெற்றிருக்கிறார். தண்ணீர் தவிர வேறே எதையும் அவர் புசியாமல் எண்பதுநாள் வரையும் இருக்கிறார். அதே மாதிரியாய் 40-சிறுவர்களை அவர் பழக்கிக்கொண்டு வருகிறார். அவர்களுக்கு மாம்சமுதலிய அசுத்த வஸ்துக்களைக் கொடாமல் ஒரேவேளை போஜனத்துடன் வளர்த்து வருகிறார். ஒருநாளையில் மூன்று நான்கு தடவை தின்பது சுகாதாரத்தைக் கெடுக்கத் தக்கதென்றே அவர் அபிப்பிராயங்கொள்ளுகிறார்.

“ஒருபோதுயோகியே யொண்டளிர்க்கைமாதே
யிருபோது போகியேயென்ப—திரிபோது
ரோகியே நான்குபோதுண்பா னுடல்விட்டுப்
போகியே யென்றுபுகல்.”

(உடல்விட்டுப்போகி=பிணம்)

என்ற இந்துக்களின் சித்தாந்த உண்மையை இந்த டாக்டர் கண்டறிந்தோ அச்சிறுவர்களை அவ்வண்ணம் வளர்த்து வருகிறார்போலும்!

கைத்தொழில் வகைப்பொருட்காட்சி.—வருகிற அக்டோபர்மீ பூனா பட்டணத்தில் ஒருமகத்தான கைத்தொழில்வகைப்பொருட்காட்சி அமைத்துக்காட்டப் படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது விஷயமாகப் பிரவர்த்தித்துவரும் சங்கத்தார் அயர்விலா ஊக்கத்துடன் பாடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. அனேக பிரதேசங்களிலுள்ள தனிகர்கள் இதற்குவேண்டிய மட்டில் பொருள் முதலியவற்றால் உபகரித்து வருகிறார்கள். இக்காட்சிக்காக வந்துசேரும் பற்பலபொருள்களை மிகவும் சகாயமான கட்டணத்துக்கு ரெயில்வே மார்க்கமாய்க் கொண்டுவருவதாக ரெயில்வே கம்பெனியார் உடன் பட்டார்களாம். கைத்தொழில் வகைப்பொருள்கள் தற்காலத்திலே முயற்கொம்புபோல் அருமையாயிருக்கும் நமது நாட்டில் யாவரும் மேற்படி பொருட்காட்சிக்காக மனமொழி மெய்களினால் உதவிபுரிந்து வருவதைக்கேட்க யாம் பெருங்களிப்புறுகின்றோம்.

PRINTED AT THE ALBINION PRESS,—MADRAS.